**செய்தி வெளியீட்டு எண்.1022** **நாள் : 26.12.2009**

## பேரூராட்சிகளில் 10 ஆண்டுகளுக்கு மேல் தினக்கூலிகளாக பணியாற்றிய 191 பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயித்து நிரந்தர பணிநியமன ஆணைகளை துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

மக்கள் நலத்திட்டங்களை விரைந்து செயல்படுத்த ஏதுவாக, நிர்வாக இயந்திரத்தின் திறனை மேம்படுத்திட தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த வகையில், தேவையான அளவு புதிய பதவிகளை ஏற்படுத்துவதிலும், ஏற்கனவே உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதிலும் அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த வகையில், பேரூராட்சிகள் துறையில் 2006ம் ஆண்டு ஜீன் மாதம் 2923 தொகுப்பூதிய பணியாளர்கள் ஊதிய ஏற்றமுறை விகிதத்தில் பணியமர்த்தப்பட்டனர். மேலும், 2008ம் ஆண்டு பணித்தொகையில் கூலிபெறும் பணியாளராக பணியாற்றிய 190 பணியாளர்கள் பணி ஆய்வாளர்களாக பணிநியமனம் வழங்கி பணியமர்த்தப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக பேரூராட்சிகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக தினக்கூலி மற்றும் சில்லரை செலவின பணியிடங்களில் தொடர்ந்து பணிபுரிந்து வரும் பலர் தங்களை காலமுறை ஊதியத்தில் நியமிக்க வேண்டுமென்று துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையினை பரிசீலித்த துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 194 நபர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க 10.12.2009ல் அரசாணை எண். 242, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் உத்தரவிட்டார். அதில் 191 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணையையும், பாராட்டுக் கடிதத்தையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (26.12.2009) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இதன் மூலம் தினக்கூலி மற்றும் சில்லரை செலவினப் பணியிடங்களில் பணிபுரிந்த பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு, அதற்குண்டான அரசின் சலுகைகளையும் பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் டாக்டர். நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., மற்றும் பேரூராட்சிகள் துறை இயக்குநர் திரு.து.இராசேந்திரன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.